சீரமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். அங்குள்ள போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தும், அந்தப் பாலத்தின் வழியாக மழைக் காலங்களில் வருகின்ற நீர் நிலைகளை ஆய்வு செய்தும், அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

தொழில் மையம்

***33172 — திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மகளிருக்கான தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை

ஊக்குவிக்கின்ற வகையில் மாவட்டத் தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. எந்தவொரு மாவட்டத்திலேயும் பெண்களுக்காக தனி தொழில் மையம் அமைக்கப்படுவதில்லை. பெண்களுக்காக தனி தொழில் மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை, என்றபோதிலும், தொழில் வணிகத் துறையின்மூலமாக செயல்படுத்தப்படும் பல்வேறு மானியங்கள், திட்டங்களின்மூலம் மகளிருக்கு சிறப்புச் சலுகைகளை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் தென் மாவட்டங்களை தொழில்மயமாக்குவதற்காக மதுரை, தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தினை செயல்படுத்த, சிறப்பு செயலாக்க முகமை அமைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையில் Trade Centre அமைப்பதற்கு அனுமதி அளித்த M.S.M.E. துறைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் பத்து குறுந்தொழில் குழுமங்கள் அமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்ததற்கும் நன்றியைக் கூறி, அந்தக் குறுந்தொழில் குழுமம் ஒன்றை விருதுநகர் மாவட்டத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு பத்து குழுமங்களைப் பெற்று, சிறப்புக் குழுமத் திட்டத்திலே, தமிழ் மாநிலம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத்

2014 பிப்ரவரி 18]

தட்டும் ஒலி) அந்த வகையிலே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழுமத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சார்பில் கோப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதியில் நிச்சயமாக அந்தக் குழுமத்தை கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சில பணிகள் என்று சொல்லுகின்றபோது மகளிருக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில், திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டை, சேலம் மாவட்டம் கருப்பூர், மதுரை மாவட்டம் கப்பலூர், காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் போன்ற பகுதிகளிலே எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகளிருக்காக தொழிற்பேட்டைகளை அமைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தங்கள்வாயிலாக உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் ஏராளமாக மல்லிகைப் பூ உற்பத்தியாகின்றது. மதுரை மல்லிகைப் பூவிற்கு கூடுதல் மணம் உண்டு. எனவே, மல்லிகைப் பூவைப் பயன்படுத்தி அங்கே அரசு சார்பிலோ அல்லது தனியார் துறை சார்பிலோ சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட் தொழிற்சாலை அமைக்க இயலாது என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எந்தவொரு தொழிற்சாலையையும் அரசு அமைப்பது கிடையாது. அரசு அமைப்பதற்கு முன்வரவில்லையென்றாலும்கூட அத்தகைய சிறிய தொழில் செய்வதற்கு தொழில்முனைவோர்

முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியங்களைத் தந்து உதவுவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

66—

பணிபுரியும் மகளிர் விடுதி

***28852—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பணிபுரியும் மகளிரின் நலனைக் கருத்தில் கொண்டு 14-5-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் 13 மாவட்டங்களில் புதிதாக 20 பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்க அறிவிப்பு செய்து, அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் புதிதாக 3 பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அருகே கூடுவாஞ்சேரியில் அய்யஞ்சேரி என்ற இடத்தில் பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க மாவட்ட நிருவாகத்தால் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.